# 9-வது
# இசை விழா
## 1980

இளங்கலைஞர் மன்றம்

கலையின்பமே நிலையின்பம்

**26-9-80 — 5-10-80**

University of Jaffna
780
ILA
250328(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தரமே எங்கள் ஆதாரம்!

உங்கள் தேவைகளை ஒரே இடத்தில் நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.

- அழகு சாதனங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- அலுமினியப் பாத்திரங்கள்
- பீங்கான் - கிளாஸ் பொருட்கள்
- காஸ் (Gas அடுப்புக்கள்



மின்சார உபகரணங்கள்
வானொலி வகைகள்
கைக்கடிகாரங்கள்
தண்ணீர்ப் பம்புகள்

உங்கள் பாதகமலங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பது



Bata

பாட்டா பாதணிகள்.

மற்றும் உங்கள் இல்லத் தேவைகள் எதுவானாலும் மனநிறைவுடன் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்.

# சி. சின்னத்துரை அன் பிறதர்

39, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

☎ 284 தந்தி: "கல்கி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



University of Jaffna
250328
Library

# சமர்ப்பணம்

திவ்ய ஜீவன சங்க ஸ்தாபகரான

**சுவாமீ சிவானந்த மகராஜ் அவர்களுக்கு**

(ரிஷிகேசம், ஹிமாலயா)

இம் மலரினைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவநாகரீக டிசைன்களிலான

தங்க ஆபரணங்களுக்குச்

சிறந்த ஸ்தாபனம்

# பிறிலியன்ற் ஜுவல்லர்ஸ்

240/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



FOR

*Modern & Distingtive Jewellery*

# Brilliant Jewellers

240/1, KASTURIAR ROAD,

JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை

# இளங் கலைஞர் மன்றம்

வழங்கும்

9-வது

# இசை விழா

இடம்: யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபம்
காலம்: 26-9-80 — 5-10-80

அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்



250328

மு. இராமலிங்கம்
செயலாளர்

250323

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments of:

# KAMALA STORES

IMPORTERS & EXPORTERS

123, Bankshall Street,
JAFFNA.

☎ 7148

BRANCH:

**KAVURI FORAGE STORES**
5, Modern Market,
Hospital Road,
JAFFNA.

Prop: N. SELLADURAI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " இளங் கலைஞர் மன்றம் "

இலங்கை.

## மன்ற கீதம்

இராகம் ; யமன் கல்யாண்
தாளம் : ஆதி

இயற்றியவர் :
இயலிசை வாரிதி, யாழ்ப்பாணம்,
N. வீரமணி

பல்லவி

ஆனந்த கீதமே பாடுவோம் - எங்கள்
ஏழிசை செழிக்க நம் நாட்டிலே

சரணங்கள்

ஞானந்தனிலே தமிழ்க் கானமுஞ் செழிக்க
ஞானந்தனை வளர்த்து யாவரும் ரசிக்க
கானந்தனையே இளங் கலைஞர்கள் பாடி
ஆர்வமுடனே நாடி சீர்பெறு மன்றம் கூடி
( ஆனந்த கீதமே )

இளங்கலைஞர் உள்ளத்தில் இன்பக் கலைச்சுடரை
ஏற்றி வைத்தே ஒளிரப் போற்றி செய்திடுவோம்
விளங்கு மிளங்கலைஞர் இலங்கிடச் சேவை
இலங்கை மாநகரில் துலங்கிடவே புரிந்து
( ஆனந்த கீதமே )

ஈழத்திரு நாட்டிலே இளங்கலைஞர் மன்றம்
வாழி பல்லாண்டென வாழ்த் தொலி பாடி
ஆழத் தமிழ்க்கடலில் அழகிசை முத்தெடுத்து
அன்னை கலைவாணிக்கு ஆரமாய்ச் சூட்டிடவே
( ஆனந்த கீதமே )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைவிழாவில் இசைமாரி பொழிய வைத்த
கலைஞர்களை வாழ்த்துகிறோம் !



# வைற் கபின்

(நல்லூர் கந்தன் ஆலய முன்றல்)

**சுத்தத்திற்கும் சுவைக்கும் முன்னணி பெற்ற**
**சுவைபானச்சாலை**

எமது ஸ்தாபனத்தில் எப்பொழுதும் கலப்படமற்றது.

- சுவையான பசும்பால்
- கோப்பிரசப் பால்
- சொக்கலெட் பால்
- தயிர், மோர் வகைகளும்

சைவசிற்றுண்டி

பலரகங்களில் சாப்பிடுவதற்கு

சிறந்த இடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கலையின்பமே நிலையின்பமாம்"

# இளங் கலைஞர் மன்றம் – இலங்கை,

**காப்பாளர்கள்:-**

தவத்திரு. ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
திரு. யோகேந்திரா துரைசுவாமி அவர்கள் (யாழ். அரசாங்க அதிபர்)
திரு. இராசா விசுவநாதன் அவர்கள் (யாழ். மாநகர சபை முதல்வர்)
திரு. கே. பாலசிட்ணர் அவர்கள் (யாழ். மாவட்ட நீதிபதி)
திரு. கே. வி. நவரத்தினம் அவர்கள் (ஓய்வுபெற்ற நீதவான்)
டாக்டர், சி. கங்காதரன் அவர்கள்
சட்டத்தரணி, திரு. எஸ். கனகரத்தினம் அவர்கள், ஜே. பி. யு. எம்.
சங்கீத வித்வான், திரு. ராம். குமாரசாமி B. A. அவர்கள்
தவில் வித்துவான், திரு. என். ஆர். சின்னராசா அவர்கள்
பேராசிரியர், கே. கைலாசபதி அவர்கள்
வைத்திய கலாநிதி, என். சுப்பிரமணியம் அவர்கள்
சங்கீதபூஷணம், திரு. ஏ. எஸ். இராமநாதன் அவர்கள்
சிவநெறிக் காவலர், திரு. கே. கனகராசா ஜே. பி. அவர்கள்
திரு. எஸ். தியாகராசா அவர்கள் (எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்)
திரு. கே. ஞானசூரியன் M. Sc. (ஆசிரியர், லண்டன் முரசு)
திரு. கே. அம்பலவாணன் (சிங்கப்பூர்)

**ஆலோசகர்கள்:-**

திரு. க. சிவதாசன் அவர்கள் (பிரதி திட்டமிடல் பணிப்பாளர்)
நாதஸ்வரச் சக்கரவர்த்தி, திரு. என். கே. பத்மநாதன் அவர்கள்

**செயற்குழுவினர்:-**

| | |
|---|---|
| தலைவர் : | திரு. பொன். சுந்தரலிங்கம் |
| துணைத் தலைவர் : | திரு. டி. பத்மநாதன் |
| செயலாளர் : | திரு. மு. இராமலிங்கம் |
| துணைச் செயலாளர் : | செல்வி, ந. பாக்கியலக்ஷ்மி |
| பொருளாளர் : | திரு. எஸ். தங்கராசா |

**செயற்குழு உறுப்பினர்கள் :**

திரு. சு. பாலசண்முகநாதன்
திரு. வி. கே. குமாரசாமி
திரு. எம். சிதம்பரநாதன்
திரு. எஸ். ஜெயச்சந்திரன்
திரு. து. நித்தியானந்தன்
திரு. ஐ. வேலாயுதபிள்ளை
செல்வி, நலமணி நாகலிங்கம்
செல்வி, வாசுகி மகாரத்தினம்
செல்வி, பத்மினி நமசிவாயம்
செல்வி, மிதிலா யோகரத்தினம்
செல்வி, விநோதினி லிங்கநாதபிள்ளை
செல்வி, கமலமனோகரி குமாரசாமி
திரு. எஸ். மகேந்திரன்
திரு. எஸ். கே. கணேசலிங்கம்
திரு. என். புலேந்திரன்
திரு. கே. சித்திவிநாயகம்
செல்வி, வரதவாணி கந்தையா
செல்வி, ஜெயமணி ஐயாத்துரை
செல்வி, ஞானரஞ்சிதம் சுப்பிரமணியம்
செல்வி, மேரி சரோஜா கந்தையா
செல்வி, யோகாம்பிகை செல்லையா
திருமதி, கல்யாணி சுந்தரலிங்கம்

கௌரவ கணக்குப் பரிசோதகர்: திரு. எஸ். சு. குமாரசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Wishes from

# NITHIYA STORES

**Importers and Distributors of**
**All kinds of Nylon, Kuralon Twine**
**Fishing Nets**
**and other Fishing Accessories.**

**9, New Market,**
**JAFFNA.**

8022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணி, காணி அபிவிருத்தி,
மகாவலித் திட்ட அமைச்சர்,

## மாண்புமிகு
## காமினி திஸநாயக்க

அவர்களின்

# ஆசிச் செய்தி.



இளங் கலைஞர் மன்றத்தின் 9வது ஆண்டு இசை விழாவில் கலந்து கொள்வதில் பெருமகிழ்வடைகிறேன். இலங்கை இளங் கலைஞர் மன்றம் இலங்கைக்கும் பிரதானமாக யாழ்ப்பாணப் பகுதிக்கும் இசை, கலை, கலாச்சார நிகழ்ச்சிகளை பேணிப் பக்குவப் படுத்தும் பொருட்டு அவ்வப் போது பல கலைஞர்களை அழைத்து நிகழ்ச்சிகளை நடாத்தி ஊக்கம் அளிப்பது கேட்டு அவர்களது சேவையை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

இவ்வாறான மன்றங்கள் எமது பழைய கலைகளையும், மரபினையும், பண்பாட்டினையும், காக்க வேண்டியது மிக அவசியம். இந்த நற்கருமத்திற்கு எமது அரசாங்கம் சகல வழிகளிலும் உதவுமென உறுதியளிக்கிறேன்.

வாழ்க இளங்கலைஞர்களின் சேவை.

**MESSAGE from**
**Hon. Minister of lands and land development and Mahaweli development.**

I am very much delighted to associate myself in the music festival of the Ilam Kalaignar Mantram which is celebrating its nineth year.

This Mantram has contributed to the cultural and aesthetic development all over the island and Jaffna District in particular by bringing down young artistes of repute to perform here, to encourage talented artistes to develop their skills etc.

Organisations of this nature should foster and cultivate our old and rich traditions and culture and I assure you that our government will endeavour to assist this noble task in every way.

I wish the Ilam Kalaignar Mantram all success in their efforts.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### மாண்புமிகு எதிர்க்கட்சி முதல்வர்,
### அ. அமிர்தலிங்கம் பா. உ. அவர்களின்

# வாழ்த்துரை.

இலங்கை இளங்கலைஞர் மன்ற 9ஆவது ஆண்டு இசை விழா 26.9.80 தொடக்கம் பத்து நாட்கள் நடைபெறுவதை யொட்டி வெளியிடப்படும் விழா மலருக்கு இச்செய்தி அனுப்பு வதில் பெருமகிழ்வெய்துகிறேன். கலைஞர்கள் முன்னேற்றத்திற் காக அருந்தொண்டாற்றி வரும் இம்மன்றம் கடந்த ஒன்பதாண் டுகளில் நடாத்தியுள்ள போட்டிகளும் விழாக்களும் பாராட்டிற் குரியவை. மன்றம் 35 லட்சம் ரூபா செலவில் நிறுவவுள்ள கலா சார நிலையம் தமிழ் கூறும் நல்லுலகம் பேணிப் பாதுகாக்கும் கலை களுக்கும் கலைஞர்களுக்கும் அரியதோர் வரப்பிரசாதமாக அமை யும். அந் நிலையம் உருவாக சகலரது ஒத்துழைப்பும் கிடைக்கு மென நம்பி இவ்விழா சிறப்புற நடைபெற என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

27-9-80

அ. அமிர்தலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மாண்புமிகு யாழ். மாவட்ட அமைச்சர்,**

## திரு. யு. பி. விஜயகோன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி.

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நடாத்தும் 9வது ஆண்டு இசை விழாவிற்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த, யாழ் நகரில், யாழோடு இசைந்து கலை வளர்க்கும் கலைஞர்களை ஒன்றிணைக்கும் மன்றங்களுள் இதுவும் ஒன்றாகும். யாழ் நகரில் 2000க்கும் மேற்பட்ட சங்கீத நடன விற்பன்னர்கள் இசையோடு இசைந்து வாழ்கிறார்கள் என்பதையும், 250க்கு மேற்பட்ட கலைஞர் குழுக்கள் இக் கவின் கலையை வளர்த்து வருகின்றனவென்றும் நான் அறிகிறேன். திசை தேடி அலைகின்ற இளம் சமுதாயத்தினரை இசை வாழ் கலைஞர்கள் இட்டுச் செல்கின்ற ஆறு பாராட்டற்குரியதாகும். இம் மன்றத்தினர் வளமார் இளங்கலைஞர்கட்கு அளித்துவரும் ஆக்கமும் ஊக்கமும் இளங் கலைஞர்களிடையே ஓர் புத்துணர்ச்சியை அளிப்பதுடன் இக்கவின் கலையைத் தலையாயதெனப் பேணிப் பாதுகாக்கவும் அதன் பணியில் ஈடுபடவும் ஓர் வாய்ப்பளிப்பதாகும் எனவும் நான் நம்புகிறேன்.

இவ்விளங்கலைஞர் மன்றம் வளம் பல படைத்து, கலைக் களங்களிற் குதித்து, பல உளங்களைக் கொண்டு வளர்க, வாழ்க என வாழ்த்தி இசை விழா சிறப்புற மனமார வாழ்த்துகிறேன்.

25-9-80

யு. பி. விஜயகோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும்,
அரசாங்க அதிபருமான

## திரு. யோகேந்திரா துரைசுவாமி அவர்களின்

# ஆசியுரை.

இலங்கை இளம் கலைஞர் மன்றம் மக்களின் மனதை மகிழ்விப்பதோடு தமிழ் மக்களின் பாரம்பரிய கலை, கலாசார பண்பாடுகளையும் பேணிக் காத்து வளர்த்து வருவது கண்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இசைக் கலையின் வளர்ச்சி ஒன்றையே மனதில் கொண்டு கலைப்பணி புரிந்துவரும் மன்றத்தினரின் சேவை அளப்பரியது. நம் மக்கள் மத்தியில் கலைத்திறன் இருந்தும், அதனை வெளிப்படுத்த வசதிகள் அற்றிருக்கும் இளங் கலைஞர்களைப் பாரறியச் செய்வதில் இந்த மன்றம் ஆற்றிவரும் சேவையை நான் அறிவேன். மன்றம் அதன் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைத்த கடந்த ஒன்பது ஆண்டுகளும் அதன் சேவையைப் பொறுத்தவரை, பொன் எழுத்துக்களாற் பொறிக்கப்பட வேண்டியவை. தொடர்ந்கும் இந்த அளப்பரிய சேவையைத் தமிழ் மக்கள் பெறவேண்டுமென்று விரும்புவதோடு, இவ்விழா இனிதே பொலிவுற வேண்டுமென ஆசி கூறுகிறேன்.

25.9.80

— யோகேந்திரா துரைசுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர்,

திரு. சு. சிவதாசன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி.

தமிழகத்தில் தனிச் சிறப்போடு வளர்ந்த முத்தமிழில் இசைத்தமிழ் எப்போதும் மேன்மை பெற்று விளங்கியது. தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஆதிகாலத்தில் இருந்துவந்த கவிதைத் தமிழ் அதற்கு ஏதுவாக இருந்தது.

இசைத்தமிழின் இனிமையும், கனிவும் எவர் உள்ளத்தையும் கவரும் தன்மை பெற்றிருக்கின்றது. இத்தகைய கலையை வளர்ப்பதனுல் எமது சமூகம் போற்றுவதற்குரிய வளர்ச்சியையும் அடைகின்றது. இதன் வளர்ச்சிக்கு அரும்பாடுபடும் இளங் கலைஞர் மன்றம் நாம் போற்றும் வண்ணம் செயல்படுகின்றது. இப் பணியில் ஈடுபட்டு ஒன்பது ஆண்டுகளைக் கண்ட இம் மன்றம் மேலும் பலகாலம் இவ்வாக்கப் பணிகளில் ஈடுபடவுள்ளது.

இதுவரை காலமாக இம்மன்றம் பல இசைக் கலைஞர்களைப் போற்றியும், பேணியும் அவர்தம் கலைகளை வளர்த்தும் பெரும்பணியாற்றியுள்ளது. இம்மன்றம் நடாத்தும் விழாக்கள் மூலம் இசை ஞானம் படைத்த பலருக்கு கலையின் மறுமலர்ச்சியையே காணக்கூடியதாக இருக்கின்றது.

சென்றகாலப் பணியைவிட வருங்காலத்திலே மேலும் கூடிய பணிகளில் இம்மன்றம் ஈடுபடுமென எதிர்பார்க்கின்ருேம். தனது அரும் பணிகளைத் தொடர்ந்தும் எமது நாட்டிலே செய்வதோடு நின்றுவிடாது, கலைச் செல்வங்கள் மலிந்த பிறநாடுகட்கும் பரவச்செய்யும் மகிமை இளங் கலைஞர் மன்றத்தைச் சேரவேண்டுமென்று வாழ்த்துவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

25-9-80

சு. சிவதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**For Televising TV Programme
and for
Stereophonic Recording**

*Contact*

# SINCLAIR RADIONICS

**48/1 STANLEY ROAD,
JAFFNA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர்,
திரு. சு. சிவதாசன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி.

தமிழகத்தில் தனிச் சிறப்போடு வளர்ந்த முத்தமிழில் இசைத்தமிழ் எப்போதும் மேன்மை பெற்று விளங்கியது. தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஆதிகாலத்தில் இருந்துவந்த கவிதைத் தமிழ் அதற்கு ஏதுவாக இருந்தது.

இசைத்தமிழின் இனிமையும், கனிவும் எவர் உள்ளத்தையும் கவரும் தன்மை பெற்றிருக்கின்றது. இத்தகைய கலையை வளர்ப்பதனுல் எமது சமூகம் போற்றுவதற்குரிய வளர்ச்சியையும் அடைகின்றது. இதன் வளர்ச்சிக்கு அரும்பாடுபடும் இளங் கலைஞர் மன்றம் நாம் போற்றும் வண்ணம் செயல்படுகின்றது. இப் பணியில் ஈடுபட்டு ஒன்பது ஆண்டுகளைக் கண்ட இம் மன்றம் மேலும் பலகாலம் இவ்வாக்கப் பணிகளில் ஈடுபடவுள்ளது.

இதுவரை காலமாக இம்மன்றம் பல இசைக் கலைஞர்களைப் போற்றியும், பேணியும் அவர்தம் கலைகளை வளர்த்தும் பெரும்பணியாற்றியுள்ளது. இம்மன்றம் நடாத்தும் விழாக்கள் மூலம் இசை ஞானம் படைத்த பலருக்கு கலையின் மறுமலர்ச்சியையே காணக்கூடியதாக இருக்கின்றது.

சென்றகாலப் பணியைவிட வருங்காலத்திலே மேலும் கூடிய பணிகளில் இம்மன்றம் ஈடுபடுமென எதிர்பார்க்கின்ருேம். தனது அரும் பணிகளைத் தொடர்ந்தும் எமது நாட்டிலே செய்வதோடு நின்றுவிடாது, கலைச் செல்வங்கள் மலிந்த பிறநாடுகட்கும் பரவச்செய்யும் மகிமை இளங் கலைஞர் மன்றத்தைச் சேரவேண்டுமென்று வாழ்த்துவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

25-9-80

சு. சிவதாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**For Televising TV Programme**
**and for**
**Stereophonic Recording**

*Contact*

# SINCLAIR RADIONICS

**48/1 STANLEY ROAD,**
**JAFFNA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்றம் நடாத்திய இசைப் போட்டிக்குப் பரிசில்கள், தங்கப் பதக்கங்கள் வழங்கியோர்.



திரு. R. அரசரட்ணம் அவர்கள்
அரஸ்கோ உரிமையாளர்
யாழ்ப்பாணம்.



திரு. N. செல்லத்துரை அவர்கள்
கமலா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்
யாழ்ப்பாணம்.

சங்கீத வித்துவான்,
திரு. ராம். குமாரசாமி அவர்கள், (B. A. Dip. in Music)



திரு. V. M. சண்முகம் அவர்கள்
பிரபல வர்த்தகர்
யாழ்ப்பாணம்.



திரு. ஐ. பொன்னுத்துரை அவர்கள்
உரிமையாளர்,
கமலா கராஜ் அன் இண்டஸ்றீஸ்,
யாழ்ப்பாணம்.

250323

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. துரை சுப்பிரமணியம் அவர்கள்
கொழும்பு றெஸ்றரோறன்ற்
யாழ்ப்பாணம்.



திரு S. தியாகராஜா அவர்கள் M.M.C.
உரிமையாளர், S.T.R. பிலிம்ஸ்
யாழ்ப்பாணம்.

திரு. S. மகேந்திரன் அவர்கள்
பெனின்சுலா கிளாஸ் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.



காலஞ்சென்ற T. செல்வரட்ணம் அவர்கள்
ஞாபகார்த்தமாக
வழங்கியவர்: மகன் S. இராகவன் அவர்கள்



மறைந்த கிருஷ்ணசாமி அவர்கள் நினைவாக
அன்பளிப்பு:
திருமதி, கமலாம்பிகை கிருஷ்ணசாமி
வைன் யாட், உரும்பராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. ஆ. ஜீவரட்ணம் அவர்கள்
சிற்பாசாரியர்
திருநெல்வேலி.



திரு. R. V. கந்தசாமி அவர்கள்
தர்மகர்த்தா சபைத் தலைவர்,
வண்ணை நாச்சியார் கோவில்

A. K. S. நகைமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.



டாக்டர், T. கெங்காதரன் அவர்கள்
(புல்லாங்குழல் வித்துவான்)
வண்ணார்பண்ணை.



பிரம்மஸ்ரீ G. ஞானசேகரக் குருக்கள்
கோயில் வீதி, நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. M. ஜெகதீசன் அவர்கள்
உரிமையாளர்: திசா ரொய்ஸ் இன்டஸ்றீஸ்
யாழ்ப்பாணம்.



திரு. மு. யு. அ. கலாம் அவர்கள்
உரிமையாளர்: கலாம் ஹாட்வெயர்ஸ்
யாழ்ப்பாணம்.

திரு. S. சேவியர் அவர்கள்
சேவி கிளாஸ் தொழிற்சாலை,
நீர்வேலி.



திரு. W. S. செந்தில்நாதன் அவர்கள்
சட்டத்தரணி, யாழ்ப்பாணம்.



செல்வி, ஷீலாதேவி சங்கரன் அவர்கள்
சுபாஸ் கபே, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விம்ஸ் திருவனம்
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.



→

திரு. K. ஆனந்தகுமார் அவர்கள்
இயக்குனர்,
பொன்ட் (Bond) இன்ஸ்ரிரியூட்

எமது மன்றத்தால் வெளியிடப்படும் இம் மலரின்
முதற் பிரதியினை

இளங் கலைஞர் வளர்ச்சியில் இணையற்ற ஆர்வமுடையவரும்,
சமூக சேவையாளரும், யாழ்ப்பாணம் A. K. S. நகைமாளிகை
முகாமையாளருமாகிய

## திரு. S. சிவநேசன் அவர்கள்

பெற்றுக்கொள்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றம் நடாத்திய அகில இலங்கை இசைப்போட்டியில் பங்குபற்றி முதலாம், இரண்டாம், மூன்றும் இடங்களைப் பெற்ற இளங் கலைஞர்களுக்கு தங்கப்பதக்கம், வெற்றிக்கேடயம், வெற்றிக்கிண்ணம் பரிசில்களாக வழங்கப்படுகிறது.

## வாய்ப்பாட்டு கீழ்ப்பிரிவு



செல்வி, ரஞ்சனி பாலசிங்கம்
(முதலாம் இடம்)



செல்வி, சாரதா சச்சிதானந்தன்
(இரண்டாம் இடம்)



செல்வி, சுஜாதா பத்மசிகாமணி
(மூன்றும் இடம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாய்ப்பாட்டு மத்திய பிரிவு

செல்வி, குமுதினி நவரட்ணம்
(முதலாம் இடம்)



செல்வன், ஸ்ரீதரன் சின்னராஜா
(இரண்டாம் இடம்)

செல்வி, ராஜசோதி சோமசுந்தரம்
(மூன்றும் இடம்)

## வாய்ப்பாட்டு மேற்பிரிவு



செல்வி, யசோதரா கந்தசாமி
(முதலாம் இடம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி, பராசக்தி சிவலிங்கம்
(இரண்டாம் இடம்)



செல்வி, ஜெகசோதி சோமசுந்தரம்
(மூன்றும் இடம்)

## வீணை கீழ்ப்பிரிவு



செல்வி, தயாபரி செந்தில்நாதன்
(முதலாம் இடம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி, ஷகிலா தட்சணாமூர்த்தி
(இரண்டாம் இடம்)



செல்வன், ஜெய்கரன் ஜெகதீசன்
(மூன்றும் இடம்)

## வீணை மத்தியபிரிவு




செல்வி, வாசுகி மகாரட்ணம்
(முதலாம் இடம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி, ஹேமமாலினி சோமாஸ்கந்தன்
(இரண்டாம் இடம்)

## மிருதங்கம் கீழ்ப்பிரிவு



செல்வன், நந்தகுமார் நடராசா
(முதலாம் இடம்)



செல்வன், சிவகுமாரன் கனகரட்ணம்
(இரண்டாம் இடம்)



செல்வன், துஷ்யந்தன் சிவசம்பு
(மூன்றும் இடம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைவிழா சிறப்புற வாழ்த்துக்கள்!



எங்கள் ஸ்தாபனத்தில்

★ அழகு சாதனங்கள்

★ அன்பளிப்புப் பொருட்கள்

★ அலுமினியப் பாத்திரங்கள்

★ பீங்கான் - கிளாஸ் பொருட்கள்

இன்னும் எமது ஸ்தாபனத்திலுள்ள பொருட்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

# யாழ் மெற்றல் விற்பனை நிலையம்

இல. 6, புதிய சந்தை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7596

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KALAM HARDWARES

(DIRECT IMPORTER)

Dealer in:
HARDWARE, BRASSWARE & ALL KINDS OF PAINT
MOTOR CARS & FURNITURE UPHOLSTEERY
MATERIALS & HOOD LINING Etc.

ஓர் நற்செய்தி!


ஜப்பான், ஜெர்மன், இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து புதிதாக அல்லது முற்றிலும் திருத்தப்பட்ட வான்கள், மோட்டோர் சயிக்கில்கள், லேர்த் மிசின், மில்லின், கிரைண்டிங், ட்ரில்லிங், வூட் வேர்க்கிங் மற்றும் கைத்தொழில் நிலையங்களுக்கு வேண்டிய யந்திர சாதனங்கள் யாவும் நிதானமான விலைக்கு வரவழைத்துக் கொடுக்கின்றோம். முழுவிபரங்களுக்கு நேரில் தொடர்புகொள்ளவும்.

**கலாம் ஹாட்வெயர்ஸ்**
104, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

104, Stanley Road,
JAFFNA.
☎ 325

---

With the best Compliments of:



# Vasanthas Motor Mart

N. M. W. BUILDING,

**44, STANLEY ROAD,** **JAFFNA.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எமது மன்றம் நிறுவவுள்ள கலாசார நிலையத்திற்கான 15 பரப்புக் காணியை
90 வருடக் குத்தகைக்கு மனமுவந்து அளித்துள்ள
நல்லூர் கொன்றையடி வயிரவர் ஆலய தர்மகர்த்தா

**திரு. க. சிவஞானம் அவர்களும்,**
**திருமதி, சிவஞானம் அவர்களும்.**

இத்தகைய தர்ம கைங்கரியங்கள் பல ஆற்றியுள்ள பரம்பரையைச் சேர்ந்த
இவர்களுக்கு மன்றம் தன் மனமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(14-8-80இல் யாழ். மாவட்ட அமைச்சர் திரு. பு. பி. விஜயக்கோன் அவர்களை மன்றத் தூதுக் குழுவினர் பேட்டி கண்டபோது எடுக்கப்பட்ட படம்)

இடமிருந்து வலம்:

திருவாளர்கள், மு. இராமலிங்கம் (மன்றச் செயலாளர்), பொன். சுந்தரலிங்கம் (மன்ற தலைவர்), சட்டத்தரணி எஸ். கனகரத்தினம் ஜே. பி. யு. எம்., யாழ். மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர், யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி, மாவட்ட அமைச்சர், மேலதிக மாவட்ட நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன், திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. சு. சிவதாசன், திட்டமிடல் அதிகாரி திரு. என். புவனேந்திரன், தவில் வித்துவான் திரு. என். ஆர். சின்னராசா, நாதஸ்வரச் சக்கரவர்த்தி திரு. என். கே. பத்மநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14—8—80இல் இளங் கலைஞர் மன்றத் தூதுக் குழுவினர் யாழ் மாவட்ட அமைச்சரைப் பேட்டி கண்டு கையளித்த மகஜரின் தமிழாக்கம்.**

## பின்னணி

கலை, கலாசாரத்தில், குறிப்பாக நுண்கலையில் யாழ்ப்பாணம் இலங்கையில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஏனைய தமிழ்ப் பிரதேசங்களோடு ஒப்பிடுங்கால் யாழ்ப்பாணத்தில் கலைஞர் சமூகம் பெருமளவில் இருப்பது கண்கூடு இங்குள்ள கலைஞர்கள் கலைகளை வளர்த்துவரும் அதேசமயம் இரசிகப் பெருமக்களும் கலைத் துறைக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கத் தவறவில்லை. கல்வி முன்னேற்றத்துடன் நுண்கலை அறிவும் வளர்ந்துள்ளது. தமிழர்களின் பொக்கிஷமான இக்கலை கடந்த பல நூற்றாண்டுகளாகத் தென்னிந்தியாவிலும், ஈழத்திலும் மிகச் சிரத்தையுடன் பேணப்பட்டு வருகின்றது: மிக அண்மைக்காலத்தில் இசையும், நடனமும் புதுமெருகும், புத்தாக்கமும் பெற்றுள்ளன. கர்நாடக இசை பூரணத்துவத்தின் உச்ச நிலையையடைந்துள்ளதென கற்றறிந்தோர் கருதுவர். இத்தகைய வளமான கலையைப் பரப்புவதிலேயே கலைஞர்களும், இரசிகர்களும் ஈடுபட்டுள்ளனர்.

ஈழம் சுதந்திரம் அடைந்த பின் இசையும், நடனமும் பலராலும் பயிலப் பட்டு வருகின்றது. இளைஞர்கள் பலர் இத்துறைளிகல் ஈடுபாடு கொண்டுள்ளனர். இராமநாதன் இசைக் கல்லூரி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் இசைப் பகுதி போன்றவை கலைத்துறையில் அரிய சேவை செய்து வருகின்றபோதும், நல்லதொரு தரமான நிலையை அடையும் கலைஞர்கள் பிற்காலத்தில் தம் ஆற்றலை வெளிக்காட்டக்கூடிய வாய்ப்புகள் அரிதாகவே உள்ளன. இக் காரணத்தினால் ஆற்றல் மிக்க பல கலைஞர்கள் இலைமறை காயாக வாழ்ந்து மறைகிறார்கள். கலையில் ஆர்வங்கொண்டோர் இந்நிலை மாறுவதற்கான வழிவகைகளைக் காணவேண்டும். இத்தகைய சந்தர்ப்பத்தில்தான் கலைகளுக்கான சகல செயற்பாடுகளும் நடைபெறக் கூடிய ஒரு கலாசார மத்திய நிலையத்தின் தேவை நன்குணரப்படுகிறது. கலைகள் ஒளிர்ந்து மிளிர இசை, நடனம், நாடகம் ஆகிய துறைகளுக்கு அரசின் ஆதரவு பெரிதும் வேண்டப்படுகின்றது.

## கலாசார பரிவர்த்தனை

கலையை வளர்ப்பதில் ஆர்வங் காட்டிவரும் சில இயக்கங்கள் பாரம்பரிய கலைகளை அவற்றின் தூய்மையான நிலையில் பாதுகாத்து வருகின்றன. எனினும் ஏனைய கலாசாரங்களிலிருந்தும் சிறந்த கலை வடிவங்களின் தாக்கத்தை ஒதுக்க விரும்பவில்லை. கலைகள் எங்கிருந்தாலும் அவை சிறந்தவையாயின் அவற்றை ஏற்கத் தயாராயுள்ளன. எமது கலாசார வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அத்தகைய கலாசார இணைப்பு - பரிவர்த்தனை நன்றெனவே கருதுகிறோம்.

இவ்வுணர்வுகளுக்கு வடிவங் கொடுத்து நடைமுறைப்படுத்த, கலைகள் தங்கு தடையின்றி வளர சுமுகமான சூழ்நிலையும், அடிப்படை வசதிகளும் அமைத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் பிர
கொடுத்தல் அவசியமாகும். 1960 ஆம் ஆண்டு காலம் வரையில் ஊக்கமளித்தது.
தேச கலா மன்றங்கள் அமைத்து, அவற்றின் மூலம் கலைக்கு ஓரளவு கலைத் தொண்டி
சுயாதீனமான கலாசார இயக்கங்கள் பல தோன்றித் தம்மாலான துறைகளில்
னைப் புரிந்துவருகின்றன. இவற்றில் சில இசை, நடனம், நாடகம் ஆகிய
தலை சிறந்த கலைஞர்களைக் கொண்டுள்ளன.

## இலங்கை இளங் கலைஞர் மன்றம்

இசைத் துறைக்கு குறிப்பிடத்தக்க தொண்டாற்றி வருவதும், ஆற்றலும் அறி
வும் மிக்க இளைஞர்களைக் கொண்டதுமான இயக்கமே இலங்கை இளங் கலைஞர் மன்
றம். இசைத்துறையில் துறைபோகிய முதிர்ந்த கலைஞர்கள் பலரது ஆற்றலையும்,
அநுபவத்தையும், அறிவையும் பெற்றுப் பயன்கொள்ளும் இம் மன்றம் 1971 ஆம்
ஆண்டிலிருந்து இசை விழாக்களும், இசைப் போட்டிகளும் நடாத்துவதில் ஈடுபட்
டுள்ளது. இவ் விழாக்கள்மூலம் பல கலைஞர்கள் தம் ஆற்றலை வெளிக்கொணர
வாய்ப்பும், பல்லாயிரம் இரசிகர்கள் நல்ல தரமான இசையை நுகரச் சந்தர்ப்பமும்
கிட்டுகிறது. வருடாந்தம் பத்து நாள் விழாவில் இளங் கலைஞர்களுக்கு முக்கியத்து
வம் கொடுக்கப்படுகிறது. இவ் விழாக்களில், போட்டியில் வெற்றி பெற்றோருக்குத்
தங்கப்பதக்கம் போன்ற கவர்ச்சிகரமான பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இதுவரை
அறுபது தங்கப் பதக்கங்கள், அறுபது கேடயம், அறுபது கிண்ணங்கள் வழங்கப்பட்
டுள்ளன. மேலும் வருடந்தோறும் மூன்று நாள் தியாகராஜ சுவாமிகள் உற்சவமும்
நடாத்தி வருகின்றது இம் மன்றம்.

யாழ்ப்பாணத்தில் தரமான கலைஞர்கள் இசையிலும், நடனத்திலுமாக இரண்
டாயிரத்துக்கு மேற்பட்டோர் உள்ளனர். மேலும் இருநூற்றைம்பதுக்கு மேற்பட்ட
இசை, நடன, நாடகக் குழுவினரும் உளர். இளங் கலைஞர் மன்றம் பரவலான இசைச்
சமூகத்திற்குத் தொண்டாற்றி வருகிறது.

''இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'' என்பதற்கிணங்க கலையில் தேர்ச்சி
பெற ஒருவன் இளமையிலேயே கலையைக் கற்கத் தொடங்கவேண்டும். ஒரு குழந்
தைக்கு இசையோ, நடனமோ எத்துறையில் நாட்டமுண்டோ அதனையறிந்து அத்
துறையில் இளமையிலேயே கற்பித்தல் வேண்டும். கற்பித்தலும் அந்தந்தக் கலையில்
துறைபோகியவர்களால் மேற்கொள்ளப்படவேண்டும். இ. க. மன்றம் பல வருட
செயற்பாட்டின் காரணமாக கற்பவர் – கற்பிப்பவர் ஆகிய இருதிறத்தாரையும்
நன்கு ஒன்று சேர்த்து பரஸ்பரம் நன்மை பெறச் செய்வதுடன் தானும் நன்மை
பெறுகின்றது.

## கலாசார நிலையத்தின் அவசியம்

கலைத்துறையில் சில முக்கிய கருமங்களை ஆற்றுவதற்கும், கலாசார வேலைகளுக்
குமென அடிப்படைத் தேவையாக கலாசார நிலையம் ஒன்றின் அவசியத்தை இம்
மன்றத்தினர் தம் ஒன்பது ஆண்டு அனுபவத்தில் அறிந்துள்ளனர். ஈழத்தின் ஏனைய
பகுதியிலிருந்தில்லாவிடினும், யாழ்ப்பாணக் குடாநாட்டின் சகல பகுதிகளிலிருந்
தும் மாணவர்களை இக் கலாசார நிலையம் கவரும் என்பது இம் மன்றத்தினர் கருத்
தாகும். இத்தகைய நிலையத்தின் மூலம் மன்றம் பல தேவைகளைப் பூர்த்தி செய்யக்
கருதுகிறது. தற்சமயம் எத்தனையோ மாணவர்கள் உற்சாகத்தோடு இசையையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடனத்தையும் கற்றபோதும் பின்னைய ஆண்டுகளில் தங்கள் திறமையை வெளிக் காட்டக்கூடிய வகையில் கச்சேரிகள் செய்வதற்குப் போதிய வசதிகள் இல்லை. எனவே பெரும்பாலோரின் கலை வாழ்க்கை அரங்கேற்றத்துடன் முடிந்துவிடுகிறது: உலகின் தலைசிறந்த கலைஞர்களுடன் ஈடுகொடுக்கும் வகையில் நாமும் நம் கலைஞர்களை உருவாக்கவேண்டுமாயின் இக்குறை நீக்கப்படவேண்டும்.

## கலாசார நிலையம்

மேற்கூறப்பட்ட சகல அம்சங்களையும் கருத்திற்கொண்டு இம் மன்றம் கலை, கலாசாரத் தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்யும் வகையில் ஒரு பெரும் திட்டத்தை வகுத்துள்ளது. இக் கட்டிடத் திட்டம் ஏறக்குறைய இருபதாண்டுகளாக இருந்து வரும் ஒரு முக்கிய தேவையைப் பூர்த்தி செய்வதாகும். இத் திட்டப் பிரகாரம் ஆயிரத்தைந்நூறு ஆசனங்கொண்ட கலாமண்டபம், ஒலிப்பதிவறை, தங்கும் அறைகள், ஆய்வகம், நூலகம், வாத்தியக்கருவி காட்சியறை, மாநாட்டு மண்டபம் ஆகிய அனைத்தும் ஒரே இடத்தில் அமைந்திருக்கும்வகையில் ஒரு நிலையம் அமைக்கப்படும். கர்நாடக இசை, பரத நாட்டியம் ஆகிய துறைகளில் அதியுயர் பெறுபேற்றை அடையும் வகையில் கட்டிட அமைப்பு அமைந்திருக்கும். மிகத் திறமான ஒலி, ஒளி அமைப்புகளும், மின் பொறியினால் இயக்கப்படும் திரைகளும் மேடையை அலங்கரிக்கும். இரசிகர்களுக்குச் சிறந்த வசதிகள் அமைத்துக்கொடுக்கப்படும்.

ஒலிப்பதிவு அறையில் இசைப் பிரியர்கள் வேண்டும்போது ஒலிப்பதிவு நாடாக்கள் போட்டுக் கேட்கவும், புதிதாக ஒலிப்பதிவு செய்யவும், பழம்பெரும் வித்துவான்களின் இசையைக் கேட்கவும் வசதிகள் செய்யப்படும்.

நூலகத்தில் இசையில் அரிதாகக் கிடைக்கும் நூற்பிரதிகள் சேகரித்து வைக்கப்படும். கலைத்துறையில் ஆய்வு மேற்கொள்வோர்க்கு இது ஒரு அடித்தளமாக அமையும். உலகப் பிரசித்திபெற்ற கலைஞர்களின் ஒலிப்பதிவு நாடாக்களும் சேர்த்து வைக்கப்படும்.

இக் கலாசார நிலையம் பூர்த்தியாகும் பட்சத்தில் இசை, நடனக் கச்சேரிகள் பன்மடங்கு பெருகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் யாழ்ப்பாணத்தின் பல பகுதியிலிருந்தும், பிற மாகாணங்களிலிருந்தும், ஏன் பிறநாடுகளிலிருந்துங் கூட கலைஞர்கள் வந்து ஒன்றுகூடும் சந்தர்ப்பம் ஏற்படுவதோடு திறமையான அமைப்பு முறையும், கலைஞர்கள் தத்தம் அறிவாற்றல் அநுபவத்தைப் பகிர்ந்து கொள்ளும் அரிய வாய்ப்பும் உண்டாகிறது. கலைஞர்கள் விழாக்காலங்களில் ஒரேயிடத்தில் தங்கியிருப்பதால் மன்றம் எத்தனையோ சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளும். இதற்கென இக் கலாசார நிலையத்தில் பத்து விடுதி அறைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இசை, நடனப் பயிற்சியளிக்க வசதியான விரிவுரை அறைகளும் அமைக்கப்படும்.

ஒரு மாநாட்டு மண்டபம் மிக முக்கியமானதாகும். நுண்கலைத்துறையில் வெவ்வேறு பிரிவினரிடையே கருத்து வேற்றுமை காணப்படுகிறது. வேற்றுமையில் ஒற்றுமை காணவும், கருத்துப் பரிமாறல் செய்யவும் கலந்துரையாடல் மிக முக்கியமானதாகும். கலந்துரையாடல், கருத்தரங்கு போன்றவற்றிற்கு வசதியாகவே இக் கலாசார நிலையத்தின் ஒரு பகுதியாக மாநாட்டு மண்டபம் கருதப்படுகிறது. மாநாடுகள் நடாத்தக்கூடிய மண்டபம் இம் மாவட்டத்தில் ஒன்றுமேயில்லை என்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருநூற்றைம்பது ஆசனங்கொண்ட
தையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாகும் மாநாடு நடாத்த வசதியளிக்
இம் மண்டபத்தில் அரசாங்க, தனியார் துறையினரும் சமாளிக்குமென
கப்படும். இதன்மூலம் மன்றம் தன் நிதி நிலைமையையும் ஓரளவு
எதிர்பார்க்கப்படுகிறது.

## செயல் திட்ட அமுலாக்கல்.

இறங்கியுள்ள
இக் கலாசார நிலையத் திட்டத்தை அமுலாக்குவதில் தீவிரமாக கோவிலுக்
மன்றம் முதல் நடவடிக்கையாக பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி பதினைந்து
கும், யாழ். பல்கலைக் கழகத்திற்கும் வெகு அண்மையிலுள்ள காணி அகற்றித்
பரப்பினைத் தொண்ணூறு வருட குத்தகைக்கு எடுத்து, பனைகள் தறித்து வைத்
துப்புரவாக்கிக் கம்பிவேலியிட்டுக் கட்டிடவேலை ஆரம்பிப்பதற்கான நிலையில் தளபா
துள்ளது. புகழ்பெற்ற கட்டிடக் கலைஞரது சேவையும் பெறப்பட்டுள்ளது: தேவை
டங்களுட்பட இக் கலாசார நிலையம் கட்டி முடிய மூன்றரைக் கோடி ரூபா
யெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

5-11-80 இல் கால்கோள் விழா நடைபெறவுள்ளது. இரண்டு வருடங்களில் கட்டிட வேலைகள் முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1982ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 10வது தியாகராஜ உற்சவத்தின்போது இக் கட்டிடம் திறந்து வைக்கப்படவேண்டுமென்பது திட்டம். எனவே அதற்கேற்றமுறையில் இத் திட்டத்திற்குத் தேவையான நிதியைக் காணுதல்வேண்டும்.

## நிதி ஒழுங்குகள்

இந் நிலையத்தைத் திட்டமிட்டுக் கட்டி முடிப்பதற்கும், நடத்துவதற்கும், இசை வகுப்புகள், இசை விழாக்கள் நடாத்துவதற்கும் மன்றமே பொறுப்பாயிருப்பதனால் இதற்குத் தேவையான நிதியின் பெரும் பகுதியை மன்றம் சேகரிக்கும் கடப்பாடுடையது, எனவே 1·5 லட்சம் சேர்த்துள்ள மன்றம் இன்னும் பல அபிமானிகளிடமும், இரசிகர்கள், கலைஞர்களிடமும் பெருந் தொகையை எதிர்பார்க்கிறது.

இந்நிலையம் முழு மாவட்டத்திற்கும் சேவைசெய்யவுள்ளதால், மாவட்டத்தைச் சேர்ந்த சகல தே. பே. உறுப்பினர்களும் மனமுவந்து பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவில் 1% ஒதுக்கின் பேருதவியாயிருக்கும். கலை வளர்க்கும் ஆர்வமுள்ள நகரபிதாக்களும் மாநகரசபை நிதியில் ஒரு பகுதி கொடுத்துதவலாம். இவையனைத்தும் சேர்ந்தாலும் கட்டிடம் நிறைவேறப் போதாதென்பதால் மத்திய அரசின் உதவியும் வேண்டப்படுகிறது. கலாசார வாழ்க்கைக்கான மத்திய அரசின் இத்தகைய உதவியே கட்டிடம் பூர்த்தியாக வழிவகுப்பதுடன் கலாசார ஒன்றிணைப்புக்கும், சமூக ஒருமைப்பாட்டுக்கும் அடிகோலுமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

பிடவைத் தினிசுகள் எதுவானாலும்

# மணியம்ஸ்

நவீன சந்தை, யாழ்ப்பாணம்.



வனிதையர் விரும்பும் வகைவகையான

- பிடவைத் தினிசுகள்
- கூறைச் சேலை வகைகள்

ஆடவர் விரும்பும் அழகிய
சேட்டிங், சூட்டிங் வகைகள்

குழந்தைகளுக்கான றெடிமேட் உடைகள்
மற்றும் அழகுசாதனப் பொருட்கள் யாவும்
நிதான விலையிற் பெற்றுக்கொள்ளலாம்.

# *Maniams*

16, MODERN MARKET,
JAFFNA.

Phone: 7545

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# இலங்கை இளங் கலைஞர் மன்றம்



## நேற்று... இன்று... நாளை...

மு. இராமலிங்கம், B. Sc. Dip. in Ed.
செயலாளர், இ. க. மன்றம்

முத்தமிழின் நடுநாயகமாக விளங்கும் இசைக்கலை தமிழ் மக்களின் தலைசிறந்த கலையாகும். செருக்குற்ற இராவணேஸ்வரன் இறைவனால் தண்டிக்கப்பட்டபோது, அத்தண்டனையினின்றும் தப்பித்துக் கொள்ளும் அளவுக்கு இறைவன் மனத்தை மகிழ வைத்ததும், நெகிழ வைத்ததும் இசைக் கலையே. இத்தகைய இசைக் கலையை நுணுக்கமறிந்து கற்றுணர்ந்து கையாளும் கலைஞர்களை உருவாக்குதல் தனிப்பெருந் தொண்டாகும். இத்துறையில் இளங் கலைஞர்களைப் பல்லாற்றானும் ஊக்குவிக்கும் நோக்குடன் இற்றைக்கு ஒன்பது ஆண்டுகளுக்கு முன் 1971 நவம்பர் 2ம் திகதி ஆரம்பிக்கப்பட்டதே இலங்கை இளங் கலைஞர் மன்றம். ஒன்பதாண்டுப் பருவமேயாயினும் இக் குறுகிய கால எல்லையில் மன்றம் பலரும் போற்றற்குரிய வளர்ச்சியை அடைந்துள்ளமை கண்கூடு.

ஐந்நூறுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட இம் மன்றம் தன் செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயலாற்றி நிறைவேற்றி வருகின்றது. வருடந்தோறும் இசையின் சகல பிரிவுகளிலும் போட்டிகள் நடாத்திப் பரிசில்களாக தங்கப்பதக்கங்களும், கேடயங்களும், கிண்ணங்களும் வழங்கி வருகின்றது. பவுன் விலை பன்மடங்காக ஏறியுள்ள இந்நாளிலும் தங்கப் பதக்கம் வழங்கப்படுதல் அங்கத்தவர்களது அயரா முயற்சியையும், மன்றத்தின் தளராத கொள்கையையும் புலப்படுத்தும். பத்துநாள் இசை விழாக்களும், மூன்றுநாள் தியாகராஜ சுவாமிகள் உற்சவமும் வருடாவருடம் புதுமெருகு பெற்றுப் புதுப் பொலிவுடன் விளங்குவதைக் காணலாம்.

கடந்த ஏப்பிரல் மாதம் மன்றத்தின் பெயரால் 'மியூசிக் அக்கடெமி' ஆரம்பிக்கப்பட்டு வகுப்புகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. மன்றத்தின் சரித்திரத்தில் கடந்த ஆண்டு ஆவணி மாதம் ஒரு புதிய அத்தியாயமாகும். மன்றத்திற்கென ஒரு கலாமண்டபம் அமைத்தல் பற்றிய கருத்து உருவாகி, அதற்கென புத்தூர் மழவராயர் நம்பிக்கைச் சொத்தில் நல்லூரிலுள்ள காணி பத்துப் பரப்பு குத்தகைக்குக் கிடைத்திருந்தும் அக் காணியில் குடியிருப்போரைக் குடிபெயரச் செய்வதிலுள்ள சிக்கல்கள் காரணமாக அக்கருமம் கைகூடாததாயிற்று. கடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு நடுப்பகுதியில் கட்டிட நிதி திரட்டும் பணியில் மன்றம் தன் கவனத்தைத் திருப்பியது. இந்திய இசைக் கலைஞர்களை வருவித்து நிதிக்கச்சேரி நடாத்தி நிதி திரட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் அக்காலகட்டத்தில் இலங்கை வந்திருந்த தஞ்சாவூர் உபேந்திரனின் அனுசரணையுடன் பிரபல பாடகர் டாக்டர், எம். பாலமுரளிகிருஷ்ணா குழுவினரின் கச்சேரியை நடாத்தத் திட்டமிடப்பட்டது. இதேசமயப் வர்த்தகச் சக்கரவர்த்தி திரு. சி. சின்னத்துரை அவர்களைத் தலைவராகக் கொண்ட கட்டிடக் குழுவொன்றும் அமைக்கப்பட்டது. இக் குழு ஆறு முறை கூடியும் காணி பற்றிய ஒரு தெளிவான நிலை உருவாகாத வகையில் ஒரு மந்தநிலை காணப்பட்டது. நிதிக் கச்சேரி முயற்சியில் மூன்றுமாத காலமாக மன்ற அங்கத்தவர்கள் முழுமூச்சாக உழைத்ததின் பலனாக அக் கருமம் வெற்றிகரமாக நிறைவேறியது. நிகர லாபமாக ஒன்றரை இலட்சம் ரூபாவுக்கு மேல் பெற்று எம் மன்றத்திற்குமில்லாத பெருமையை இம் மன்றம் தட்டிக்கொண்டது. இதேசமயம் தெய்வம் அருள்பாலித்ததுபோல, கொன்றலடி வயிரவர் கோவில் தர்மகர்த்தா திரு. சிவஞானம் குடும்பத்தினர் தொடர்பு மன்றத்திற்கு ஏற்பட்டதன் பலனாக அப் பெரியாரின் பெருந்தன்மையினாலும், வயிரவக் கடவுளின் அருட்டிறத்தாலும் கோயிற் காணியில் பதினைந்து பரப்பு 90 வருட குத்தகைக்குக் கிடைத்தது. அக் காணியை எம் மன்றத்திற்குக் குத்தகைக்கு வழங்கிய பெரியார் சிவஞானம் தம் பதிகளுக்கும், அவரைச் சார்ந்தோருக்கும் மன்றம் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. காணியிலுள்ள பனைகள் அத்தனையும் அகற்றப்பட்டு கம்பிவேலி போடப்பட்ட நிலையில் இன்று கட்டிடவேலை ஆரம்பிக்கக்கூடியதாயுள்ளது.

அடுத்து நிதியுதவி பற்றி அரசாங்கத்தை அணுகுவதற்குப் பெரிதும் உதவியாயிருந்தவர் எமது மன்ற ஆலோசகர் திரு. க. சிவதாசன் அவர்கள். அவர்களின் முயற்சியால் அரசாங்க அதிபரையும், பின்னர் மாவட்ட மந்திரியையும் எமது தூதுக்குழு சந்தித்து, யாழ் மாவட்ட தே. பே. உறுப்பினர்கள் சகலரினதும் பேருதவியுடன் ரூபா ஒரு லட்சம் கிடைத்துள்ளது. மேலும் உதவி கிடைக்கவுள்ளது. 3·5 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள கட்டிட அமைப்பு விபரம் யாம் சமர்ப்பித்த மகஜரின் சுருக்கத்தில் தரப்பட்டுள்ளது. இத்திட்டம் பெருந்திட்டமாயினும் பேராசையானதொன்றல்ல. உலகில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் நாமும் நம் திட்டத்தை வகுத்துள்ளோம். இன்று புதிதெனப்படுவது நாளை பழையதாகிவிடுகிறது. எனவேதான் நாம் நிறுவும் கலாமண்டபம் முற்றிலும் நவீனமயமானதாகவும், பல நோக்கங்களைப் பூர்த்தி செய்வதாகவும் அமைதல் அவசியமாகும். இக் கலாமண்டபம் வருங்கால சந்ததியினர்க்கு ஒரு வரப்பிரசாதமாகும். நம் நாட்டில் எத்தனையோ தலைசிறந்த ஆலயங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இக் கலாமண்டபம் கலைகளெல்லாம் வளர்க்கும் கலை ஆலயமாக, கலாலயமாக மிளிரவேண்டும். 1500 ஆசனங்கொண்ட கலாமண்டபத்தில் வாராந்த நிகழ்ச்சிகள் நடைபெறவேண்டும். மேலேயுள்ள ஆய்வகத்தில் கலைத்துறை அறிஞர்கள் ஆய்வுகள் மேற்கொள்ளவேண்டும். நூலகத்தில் நுண்கலை மாணவர்களும், ஆசிரியர்களும் தம் அறிவுப்பசி தீர்க்கவேண்டும். ஒலிப்பதிவகத்தில் புதிய குரல்களும், பழைய குரல்களும் ஒலிக்கவேண்டும். மாநாட்டு மண்டபத்தில் பல துறை அறிஞர்களும் வந்து கலந்துரையாடல் செய்யவேண்டும். விடுதி அறைகளில் கலைஞர்கள் தங்கி பரஸ்பரம் தங்கள் அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். வாத்திய பயிற்சி அறைகளில் சகல துறைகளிலும் பயிற்சி இடம்பெற வேண்டும். இக்கனவு நனவாக ஒவ்வொரு அறையில் சகல வாத்தியங்களும் இடம்பெறவேண்டும். இக்கனவு நனவாக ஒவ்வொரு கலைஞனும், கலா ரசிகனும், பொதுமக்களும் தம்மாலான ஒத்துழைப்பை நல்குவார்களென நம்புகிறோம்.

வாழ்க இசைக் கலை !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்றே விஜயம் செய்யுங்கள்!**

# நியூ ராஜா கிறீம் ஹவுஸ்

## அன் கபே

64, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்.

(ஆர். ஜி. பில்டிங் - லிடோ தியேட்டருக்கு அண்மையில்)

தரமான - சுவையான

- ★ ஐஸ் கிறீம் வகைகள்
- ★ கேக் வகைகள்
- ★ சிற்றுண்டி வகைகள்
- ★ மட்டன் ரேல்
- ★ குளிர்பானங்கள்
- ★ கட்லட்
- ★ ராஜா பீடா

சிறந்த முறையில் தயாரிக்கப்பெற்ற

**'ராஜா டிக்காஸ் கோப்பியை'**

சூடாகவும், குளிராகவும் எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும்

விழாக்கள், களியாட்டங்கள் அனைத்துக்கும் தேவையானவற்றை குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேற்றப் பாதையிலே...
# எமது மன்றம்

பொன். சுந்தரலிங்கம்
(தலைவர், இளங் கலைஞர் மன்றம்)

இளங் கலைஞர்களுக்காகவே உருவாக்கப்பட்ட மன்றம் தனது ஒன்பதாவது வயதை எட்டியுள்ளது. இந்த ஒன்பது வயதிலும் எத்தனையோ இன்னல்களைக் கண்டு கலங்காது இளைஞர்களின் கலை வளர்ச்சியே தனது முழு நோக்கெனக் கருதிச் செயலாற்றி வருகிறது. வழமைபோல் இவ்வாண்டும் தனது 9வது இசைவிழாவை 26-9-80 தொடக்கம் 5-10-80 வரை நடாத்துகின்றது. 1971 நவம்பர் 2ம் திகதி ஆரம்பமான இம் மன்றம் செய்த, செய்கின்ற செய்யவுள்ள சேவையினைக் கலையுலகத் தொடர்புடையோர் எவரும் அறியாதிருக்க முடியாது. இம் மன்றத்தின் தலைவர் என்ற முறையில் பல தடவைகள் உங்கள் கவனத்திற்குத் தந்தவற்றையே ஒன்பதாவது ஆண்டு இசைவிழாவிலும் கூற விரும்புகிறேன். இளங் கலைஞர்களுக்கென ஒரு நிரந்தர கலாமண்டபத்தை அமைத்துத் தரும்படி உங்களை இவ்வேளையில் கேட்டுக்கொள்வதுடன், எமது மண்டபம் நிறுவுவதற்கென பதினைந்து இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய 15 பரப்புக் காணியை நல்லூரிலுள்ள கொன்றையடி வயிரவர் ஆலய தர்மகர்த்தா திரு. க. சிவஞானம் குடும்பத்தினர் 90 வருட குத்தகைக்குத் தந்துதவியுள்ளனர். கலாமண்டபத்திற்கான கால்கோள் விழா 5-11-80ல் என்பதைப் பொதுமக்களாகிய உங்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம். இந்த மண்டபக் கட்டிட நிதிக்கென பிரபல தென்னிந்திய இசைக்கலைஞர் டாக்டர் எம். பாலமுரளிகிருஷ்ணா அவர்களது இசைக் கச்சேரியை நிதிக் கச்சேரியாக ஏற்பாடு செய்து 9-1-80இல் கொழும்பிலும், 12-1-80இல் யாழ்ப்பாணத்திலும் நடாத்தி ரூபா ஒன்றரை இலட்சத்திற்கு மேல் நிகர லாபமாகப் பெற்று வங்கியிலிட்டுள்ளோம்.

இளங் கலைஞர்களே, எவ்வளவோ சிரமமான இவ்வேளையிலும் இம் மன்றத்தை வழிநடத்திச் செல்கின்றோம். இந் நிலையில் உங்களது பங்கையும் சரிவரச் செய்கின்றீர்களா? இது உங்களை ஊக்குவிப்பதற்காகவே ஏற்பட்ட மன்றமே தவிர தனிப்பட்ட எவரது சொந்த நலனுக்காகவும் அல்ல என்பதுடன் இன, மத, மொழி பேதமற்ற வசதிபடைத்த, வசதியற்ற எல்லோருக்கும் இது ஒரு பொது நிறுவனமாக இயங்கி வருவதை நீங்கள் அறிவீர்கள். பொறுப்புவாய்ந்த பலர் தங்கள் பொன்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தை அர்ப்பணித்து வருகின்றனர். இந்த அரிய சந்தர்ப்பத்தை வளரும் இளங் கலைஞர்களாகிய நீங்கள் பொறுப்புடனும், பயபக்தியுடனும் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். இம் மன்றம் ஆரம்பித்து ஒன்பதாவது ஆண்டு இசைவிழாவுடன் இதுவரை 45 தினங்களுக்கு ஒருமுறையாக 22 இசை நிகழ்ச்சிகளும், 7 நாள் இசைவிழா இரண்டும், 10 நாள் இசைவிழா ஏழும், 3 நாள் தியாகராஜ உற்சவம் எட்டும், இசை அரங்கேற்றம் ஒன்றுமாக 26-5-80 திகதியுடன் நடாத்தி முடித்துள்ளது.

இதுவரை இம்மன்றம் 1500க்கு மேற்பட்ட இளங் கலைஞர்களை மேடையேற்றியதுடன் நின்றுவிடாமல் அகில இலங்கை ரீதியாக நடாத்திய போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு 66 தங்கப்பதக்கங்களும், 64 வெற்றிக் கேடயங்களும், 67 வெள்ளிக் கிண்ணங்களும் பரிசில்களாக வழங்கியுள்ளோம். இக்காலகட்டத்தில் இம் மன்றத்தினைச் செவ்வனே நடாத்திச் செல்ல மூலகர்த்தாக்களாகவுள்ள வள்ளல்கள், வணிகப் பெருமக்கள், கலாரசிகர்கள், கலைஞர்கள், அன்பர்கள் ஆகியோர்க்கும், பேராதரவு தரும் பத்திரிகை நிறுவனங்கள், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கும் இம் மன்றத்தினர் நன்றிக்கடப்பாடுடையவர்கள் என்பதுடன் மீண்டும் அவர்களது சேவை மன்றத்திற்குத் தேவை எனக் கூறி, இவ்வாண்டு இசைவிழா சிறப்புற நடந்திடவும், மன்றக் கட்டிட நிதி பெருகவும் உதவுமாறு சகலரையும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

வாழ்க இசை;
வளர்க இளங் கலைஞர் மன்றம்;
வானளாவுக மன்றக் கலாமண்டபம்.

With the best Compliments
from

**NALLUR CHILDREN'S SOCIETY**
(நல்லூர் சிறுவர் மன்றம்)

President: Mrs. N. Jegathesan

43, Chetty Street,
NALLUR, — JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை

# இளங் கலைஞர் மன்ற வரவு செலவுக் கணக்கு

காலம்: 1—5—79 தொடக்கம் 30—4—80 வரை

### வரவு விபரம்

| | ரூ. | ச. |
|---|---|---|
| மக்கள் வங்கி இருப்பு 1-5-79ல் | 13 | 52 |
| ரொக்க இருப்பு 1-5-79ல் | 165 | 17 |
| சாதாரண சந்தா | 470 | 00 |
| செயற்குழு சந்தா | 275 | 00 |
| இசைவிழா இசைப்போட்டி வசூல் | 4139 | 00 |
| மலர் விளம்பர விற்பனை | 2150 | 00 |
| தியாகராஜ உற்சவ வசூல் | 828 | 50 |
| கலாமண்டப வசூல் மாற்றம் | 2000 | 00 |
| | 10041 | 19 |

### செலவு விபரம்

| | ரூ. | ச |
|---|---|---|
| மன்ற பொதுச் செலவு | 260 | 00 |
| இசைவிழா | 2282 | 73 |
| இசைப் போட்டி பரிசில் | 2825 | 00 |
| மலர் பிரசுரம் | 2100 | 00 |
| தியாகராஜ உற்சவம் | 2420 | 26 |
| மக்கள் வங்கி இருப்பு 30-4-80 | 13 | 52 |
| ரொக்க இருப்பு 30-4-80 | 139 | 68 |
| | 10041 | 19 |

மேற்படி கணக்குகள் யாவும் உண்மையானதென உறுதிப்படுத்துகிறோம்.

பொன். சுந்தரலிங்கம்
தலைவர்

க. பாலசண்முகநாதன்
பொருளாளர்

கட்டிட நிதி வசூல் வரவு செலவு அறிக்கை
கால்கோள் விழாவிலன்று வெளியிடப்படும்.

# நன்றி நவில்கின்றோம்...

''அன்னையின் அருளின் துணையால் அன்புடன் கலைஞர் சார்பில்
நன்றியே கூறிப் புகழ்வோம் இன்று''

* மன்றத்தின் சகல விழாக்களையும் சிறப்புற நடாத்திட மண்டபம் தந்து பெருமைப்படுத்தும் யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபத்தினர்;

* ஆசிகள் வழங்கியும், தலைமை தாங்கியும் பேராதரவு நல்கிடும் பெருமக்கள்;

* விழா மலர் சிறந்திட விளம்பரம் தந்தும், பண உதவி அளித்தும் ஆதரவு தந்திடும் வணிகப் பெருமக்கள்;

* விழாவில் கலந்து சிறப்பளிக்கும் ஈழம் வாழ் கலைஞர்கள்;

* இவ்வாண்டிற்கான இசைவிழாவையொட்டிய அகில இலங்கை இசைப்போட்டிகளின் நடுவர்களாகப் பணிபுரிந்த திரு. ராம். குமாரசாமி அவர்கள், திரு. V. K. குமாரசாமி அவர்கள், திரு. K. கணேசபிள்ளை அவர்கள்;

* இசைப் போட்டியில் பரிசுபெற்ற கலைஞர்களுக்குப் பரிசில்களைத் தந்துதவிய பெருமக்கள், ஆதரவாளர்கள்;

* டாக்டர், எம் பாலமுரளிகிருஷ்ண குழுவினரின் இசைக் கச்சேரிகளைக் கொழும்பிலும், யாழ். நகரிலும் வெற்றிகரமாக நடாத்த உதவிய சகல அன்பர்கள்;

* எமது அழைப்பை ஏற்று வருகைதந்து சிறப்பித்த பிரபல தென்னிந்திய பாடகி 'பரதசூடாமணி' ஸ்ரீமதி மணி கிருஷ்ணசாமி, ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் குழுவினர்;

* விழாவையொட்டிய சிறப்புச் செய்திகள் வெளியிட்ட பத்திரிகையாளர்கள்;

* விழாமலர் சிறந்திட கட்டுரைகள், வாழ்த்துரைகள் நல்கியவர்கள்;

* குறுகிய காலத்தில் மிகுந்த பொறுப்புடன் திறம்பட அழகுற அச்சேற்றித்தந்த கண்ணன் அச்சகத்தினர்;

* ''மறப்பது மனித இயல்பு, மன்னிப்பது தெய்வீகம்'' இங்கு நன்றி கூறாமல் விட்டுப்போன நல்லவர்கள்;

அனைவருக்கும் இலங்கை இளங்கலைஞர் மன்ற அங்கத்தவர் சார்பாக
எமது நன்றியைப் பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றேன்.

இலங்கை இளங் கலைஞர் மன்றம்,
கேணியடி, திருநெல்வேலி.

மு. இராமலிங்கம்
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With the best Compliments of:**



# GANESHANANDA STORES

**244, (462) Hospital Road,**
**Jaffna.**

Dealers in : Timber, Furniture, Household Utensils, Tiles & Transport Agents.

**Prop: V. Sundarampillai** ☎ 427

---

இசைவிழா சிறப்புற வாழ்த்துக்கள் !

- சகலவித கடைச்சல் வேலைகள்
- கேற் கிறில் வேலைகள்
- இயந்திர உதிரிப்பாகங்கள் புதுப்பித்தல்
- வாட்டர் பம் வண்டில், ட்ராக்டர், என்ஜின்போட் செய்து கொடுக்கப்படும்.

# கமலா கராஜ் அன் இன்டஸ்றீஸ்

53 (309), ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

போன்: 7652

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Space Donated by:

# CEYMA SILK INDUSTRIES LTD.

Thirunelvely, JAFFNA.

Phone: 7170

Grams: 'Ceyma Silk'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைவிழா இனிது நடைபெற வாழ்த்துகிறோம்.

வண்ணத் துணி யுகத்து
வளமார் வகையனைத்தும்
எண்ணம்போல் தேர்ந்தெடுக்க
ஏற்றதோர் எழிற்கூடம்.

# கணேசன் ஸ்ரோர்ஸ்

உயர்தர பிடவை மாளிகை

63, 78, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7169
8025

எங்களிடம்

டொலர் பிராண்ட்

அலுமினியம் — சில்வர் — பித்தளைப் பொருட்கள்

கோவில் உபகரணங்கள்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

# சிவன் ஸ்ரோர்ஸ்

80, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Space Donated by:







A. K. S. SONS

JEWELLERS

68, Kannathiddy,
JAFFNA.

PHONE: 519

250328

University of Jaffna
250328

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை இளங் கலைஞர் மன்ற

# 'மியூசிக் அக்கடமி'

## இசை ஆசிரியர்கள்

நாதஸ்வரம் :
திரு. N. K. பத்மநாதன்

தவில் :
திரு. N. R. சின்னராசா

வாய்ப்பாட்டும் - பண்ணிசையும் :

சங்கீத வித்வான், திரு. ராம். குமாரசாமி (கௌரவ இசை ஆசிரியர்)
சங்கீத பூஷணம், திரு. K. R. நடராசா
சங்கீத பூஷணம், திரு. பொன். சுந்தரலிங்கம்
சங்கீத வித்வான், திரு. ச. ஜயச்சந்திரன்
சங்கீத வித்வாம்ஷனி, திருமதி, நாகேஸ்வரி ப்ரம்மானந்தா [கௌரவ இசை ஆசிரியை]
சங்கீத வித்வாம்ஷனி, திருமதி, லக்ஷ்மிதேவி பாலகிருஷ்ணர் [கௌரவ இசை ஆசிரியை]
சங்கீத ஆசிரியதரம், செல்வி, நவமணி நாகலிங்கம்
,, ,, செல்வி, மேரி சரோஜா கந்தையா
,, ,, செல்வி, கமலமனோஹரி குமாரசாமி
சங்கீத இரத்தினம், செல்வி, லலிதா செல்வராசா

வயலின் : சங்கீத பூஷணம், திரு. V K. குமாரசாமி
சங்கீத வித்வான், திரு. உ இராதாகிருஷ்ணன்
சங்கீத வித்வான், செல்வி, பாக்கியலக்ஷ்மி நடராஜா

வீணை : சங்கீத பூஷணம், ப்ரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஐயர்
சங்கீத பூஷணம், திருமதி, கமலா கிருஷ்ணமூர்த்தி ஐயர்

மிருதங்கம் - கெஞ்சிரா :

சங்கீத பூஷணம், திரு. A. S. இராமநாதன் (கௌரவ ஆசிரியர்)
சங்கீத இரத்தினம், திரு. S. மகேந்திரன்
திரு. S. K. கணேசலிங்கம் B. A. (Hons)
சங்கீத இரத்தினம், செல்வி, ஜெயமணிதேவி ஐயாத்துரை

புல்லாங்குழல் : சங்கீத வித்வான், திரு A. நமசிவாயம்
பரத நாட்டியம் : செல்வி, நளாயினி இராஜதுரை

சகல வகுப்புக்களினதும் பொறுப்பாசிரியர்:
திரு. பொன். சுந்தரலிங்கம் (தலைவர், இ. க. மன்றம்)

ஆளுநர் குழு :
தலைவர்: D. பத்மநாதன்
பொருளாளர் : மு. இராமலிங்கம்

S. K. கணேசலிங்கம்
செல்வி, வரதவாணி கந்தையா
இணைச் செயலாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FOR ANYTHING AND EVERYTHING IN

**JEWELLERY**

DIMONDS OF THE BEST QUALITY
ALWAYS IN STOCK

**ORDERS PROMPTLY EXECUTED**

Visit:

# RANEE JEWELLERS

"R. G. BUILDING"

**63, KANNATHIDDY, : : JAFFNA.**



☎ **7544**

எப்பொழுதும் நீங்கள் விரும்பும்

**தங்க வைர நகைகளை**

திருப்தியுடன் பெறுவதற்கு உகந்த இடம்

# ராணி ஆபரண மாளிகை

"ஆர். ஜீ. பில்டிங்"

63, கன்னாதிட்டி, : : யாழ்ப்பாணம்.

ஆடர் நகைகள் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

Kannan Press, Nallur.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org